தமிழ் மொழியும் இலக்கியமும்

விடுமுறைக் கால விசேட செயலட்டை

தரம் 10,11 மாணவர்களுக்கானது

இலக்கிய வினாக்கள்



ஆசிரியர் – இரா. நிஷாந்தன்

கிளி/இராமநாதபுரம் ம.வி

கிளிநொச்சி கல்வி வலயம்

(தொலைபேசி – 0770577895 – viber, whatsapp

(இலக்கியப் பகுதி சார்ந்த வினாக்கள்)

அலகு 01 – நீதிப்பாடல்கள்

01. பின்வரும் செய்யுள்களின் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. தண் தாமரை உடன் பிறந்தும் தண் தேன்
நுகரா மண்டூகம்
வண்டோ கானகத்து இடையிருந்து வந்து
கமல மது உண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங்கு உறவாடித் தம்மில்
கலப்பர் கற்றோரே.

அ. மேற்குறித்த பாடல் இடம் பெறும் நூல் எது?

……

ஆ. அப் பாடல் இடம்பெற்றுள்ள தலைப்பு யாது?

……

இ. பாடலில் மண்டூகம் என்பது குறிக்கும் பொருள் யாது?

……

ஈ. கமலம் என்றால் என்ன?

……

உ. புல்லர் எனப்படுவோர் யார்?

……

ஊ. தவளையின் இயல்பு எத்தகையது?

……

எ. வண்டின் இயல்பு எத்தகையது?

……

ஏ. அறிவுடையோர் இயல்பு எவ்வாறு காட்டப்படுகின்றது?

……
……

ஐ. அறிவற்றோரின் செயல் எவ்வாறு காட்டப்படுகின்றது?

……
……

ii. தேம்படு பனையின் திரள் பழுத்து ஒரு விதை
வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவருக்கு இருக்க நிழலாகாதே

தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை
தெள் நீர்க் கயத்து சிறு மீன் சினையிலும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகுமே

அ. இப் பாடல் இடம் பெறும் நூல் எது?

……

ஆ. இப் பாடலைப் பாடியவர் யார்?

……

இ. தேம்படு என்பது குறிக்கும் கருத்து யாது?

……

ஈ. கயம் என்பது எதனைக் குறிக்கின்றது?

……

உ. அண்ணல் யானை என்பதன் பொருள் யாது?

……

ஊ. இப் பாடலில் புலப்படும் நாற்படைகளும் எவை?

……

எ. பனைமரத்தின் இயல்பும், ஆலமரத்தின் இயல்பும் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

……
……..

iii. அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம் – மடைத்தலையில்
ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

அ. இப் பாடல் இடம்பெறும் நூல் எது?

……

ஆ. இப் பாடலைப் பாடியவர் யார்?

……

இ. மடைத்தலை என்றால் என்ன?

……

ஈ. இங்கு இடம்பெற்றுள்ள உரிச்சொல் யாது?அதன் பொருள் யாது?

……
……

உ. கொக்கின் இயல்பு யாது?

……
……..

ஊ. அடக்கமுடையாரின் இயல்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

……
……..

iv. கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் பார்த்து உண்ணும்
தன்மை இலாளர் அயல் இருப்பும் இம் மூன்றும்
நன்மை பயத்தல் இல

அ. இப் பாடல் இடம்பெறும் நூல் எது?

……

ஆ. மேற்படி பாடலின் ஆசிரியர் யார்?

……

இ. கணக்காயர் எனப்படுபவர் யார்?

……

ஈ. பிணக்கு என்றால் என்ன?

……

உ. பெரியோரின் கடமையாக கூறப்படுவது யாது?

……

ஊ. அவைக்களன் என்பது என்ன?

……

எ.ஒருவனுக்கு நன்மையை தராத மூன்று விடையங்களும் எவை?

……
……..
……

v. உப்பிலாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்
தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல் ஒப்பும்
பனையோலைப் பாயில் படுத்து உறங்கும் வாழ்வார்
மனம் கொண்டது மாளிகை

அ. இப் பாடல் இடம்பெறும் நூல் எது?

……

ஆ. இப் பாடலின் ஆசிரியர் யார்?

……

இ. அறுசுவை உணவாகக் கருதப்படுவது யாது?

……

ஈ. தப்பிய கந்தை என்றால் என்ன?

……

உ. இப் பாடலில் புலப்படும் முதுமொழி யாது?

……

ஊ. ஒருவனுக்கு மனநிறவைத் தரும் அம்சங்கள் எவையென பாடலில் கூறப்பட்டுள்ளது?

……
……..
……

vi. யானை அனையவர் நண்பு ஒரீஇ நாய் அனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் யானை
அறிந்து அறிந்தும் பாகனையே கொல்லும்
எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்

அ. இப் பாடல் இடம்பெறும் நூல் எது?

……

ஆ. மேற்படி பாடலின் ஆசிரியர் யார்?

……

இ. நண்புஒரிஇ என்றால் என்ன?

……

ஈ. கேண்மை என்றால் என்ன?

……

உ. வால் குழைக்கும் என்பதன் கருத்து யாது?

……

ஊ. பாடலில் கூறப்படும் சிறந்த நட்பு யாது?

……
……..

எ. பாடலில் கூறப்பட்டுள்ள தீய நட்பு யாது?

……
……

vii. கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே
எள்துணையானும் இரவாதுதான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.

அ. இப் பாடல் இடம்பெறும் நூல் எது?
……

ஆ. மேற்படி பாடலின் ஆசிரியர் யார்?
……

இ. யாரின் முன்பாக கல்வி உரைப்பது இனியது?
……

ஈ. மிக்கார் எனப்படுவோர் யாவர்?
……

உ. பாடலில் ஒருவனுக்கு இனிமை தரும் செயல்களாக கூறப்படுபவை எவை?
……
……..
……

& அலகு 02 – நாவலர் எழுந்தார்

01. பின்வரும் செய்யுள்களின் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நாவலர் எழுந்தார் கட்டுரை இடம்பெற்றுள்ள நூல் எது?

……

2. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையின் ஆசிரியர் யார்?

……

3. சென்னை சர்வகலாசாலையார் முதன் முதலில் நடாத்திய பி. ஏ பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தவர் இருவரும் யாவர்?

……
……

4. இந்த இருவரும் இலங்கை சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்கு போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள் அந்த இருவரும் யாவர்?

……
……

5. அன்றை அக் கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டியவர் யார்? அவர் கூட்டத்திற்கு தலமை வகிக்க முடியாமைக்கான காரணம் யாது?

……
……

6. அன்றைய கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் யார்?

……

7. அன்றைய கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் யாவர்?

……
……
……
……
……

8.“ பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி எழுந்தன கொழுங்கன லென்ன எழுந்தார்...

அ. இவ்வடிகள் இடம்பெறும் இலக்கியம் எது?

……

ஆ.. இங்கு எழுந்தார் எனக் கம்பரால் கூறப்படுபவர்?

……

இ. எழுந்தார் எனக் கட்டுரையாசிரியரால் கூறப்படுபவர்?

……

ஈ. கொழுங்கனல் என்பதன் கருத்து யாது?

……

உ . ஆகுதி என்றால் என்ன?

……

9. “ மாக மடங்கலும் மால் விடையும் பொன்னாகமும்
நாண நடந்தார்...

அ. நடந்தார் எனக் கட்டுரையாசிரியரால் கூறப்படுபவர்?

.....

ஆ. நடந்தார் எனக் கட்டுரையாசிரியரால் கூறப்படுபவர்?

.....

இ. மடங்கல் என்பதன் பொருள் யாது?

.....

ஈ. இங்கு நாகம் என்பது குறிக்கும் இருவிதமான கருத்தும் எவை?

.....

.....

10. “ எடுத்துக் கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை..
எல்லோரும் பிரமித்துப் போனார்கள்... இக் கூற்றைக் கூறியவர் யார்?

.....

11. தங்கசொரூபம், சிரித்த முகம், இருபந்தைந்து வயது இத்தகைய கூற்றுக்களால் சிறப்பிக்கப்படுபவர் யார்?

.....

12. கணிதமேதை, மகாவிவேகி, நாவரை விடவும் இரண்டு வயது மூத்தவர் இவ்வாறு கூறப்படுபவர் யார்?

.....

13. அன்று நடைபெற்ற கூட்டத்திற்கு கட்டுரையாசிரியர் வைத்த பெயர் யாது?

.....

14. விலகு பிள்ளை என நாவலரால் குறிப்பாக விளிக்கப்பட்டவர் யார்?

.....

15. பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்று சொல்கின்ற... இங்கு
பிரசண்ட மாருதம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

.....

16. நல்லூர் கந்தசுவாமி கோயில் தொடர்பாக கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் இடையில் பாரிய வழக்கு நடந்தது...

அ. கோயிலாருக்கு ஏற்பட்டாளர் யார்?

.....

ஆ. பிராமணர்களுக்கு ஏற்பட்டாளர் யார்?

.....

17. அவருக்கு ஒரு வகை வயிற்று வலி இருந்தது. அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிரார்த்தம் என்று கருதி அதை அனுபவித்துக் கொண்டு வந்தார்.

அ. இவ்வாறு வலியை அனுபவித்தவர் யார்?

.....=

ஆ. பிரார்த்தம் என்றால் என்ன?

.....

18. அவர் தனது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி பக்கத்தில் வைத்து விட்டு பாடஞ் சொல்வது வழக்கம்..

அ. இங்கு அவர் எனப்படுபவர் யார்?

.....

ஆ. ஆவாகனம் என்பது குறிக்கும் கருத்து யாது?

.....

இ.அங்கவஸ்திரம் என்றால் என்ன?

.....

19. ஆறுமுகநாவலரின் ஆசீர்வாதத்தால் இலங்கை சட்டசபையில் அங்கத்துவம் பெற்றவர் யார்?

.....

20. எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியிலே போய்விட்டார்கள். இங்கு வியாசம் என்பதன் கருத்து யாது?

.....

<u>& அலகு 03 – பாரதியார் சுயசரிதை</u>

01. பின்வரும் செய்யுள்களின் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. நீரெடுத்து வருவதற்கு அவள் மணி
நித்திலப் புன்னகை சுடர் வீசிடப்
போர் எடுத்து வரும் மதன் முன் செல
போகும் வேளை அதற்குத் தினம் தோறும்
வேர் எடுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்த்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
சீர் எடுத்த புலை உயிர்ச் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல் போல்.

அ. இப் பாடல் இடம்பெற்றுள்ள தலைப்பு யாது?

.....

ஆ. இப் பாடலின் ஆசிரியர் யார்?

.....

இ. மதன் எனப்படுபவன் யார்?

.....

ஈ. புலையுயிர் சாரர் எனப்படுவோர் யார்?

.....

உ. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது?

.....

ஊ. பாரதியார் சிறுமியின் வருகைக்காக எவ்வாறு காத்திருக்கின்றார்?

.....

.....

.....

ii. காத்திருந்து அவள் போம் வழி முற்றிலும்
கண்கள் பின்னழகு ஆர்த்து களித்திட
யாத்த தேர் உருளைப்படு மேழைதான்
யாண்டு தேர்செலும் ஆங்கு இழுப்புற்று என
கோத்த சிந்தையோடு ஏகி அதில் மகிழ்
கொண்டு நாள்கள் பல களித்திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல்
புலன் அழிந்து ஒரு புத்துயிர் எய்துவேன்

அ. யாத்த தேர் என்றால் என்ன?

.....

ஆ. மேழை என்றால் என்ன?

.....

இ. வதனம் என்பதன் கருத்து யாது?

.....

ஈ. பாரதியாரின் காதல் உணர்வு எவ்வாறு காட்டப்படுகின்றது?

.....

.....

iii. புலங்களோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்கள் ஏது விரும்புவன் அங்கு அவை
நண்ணுறப் பெறல் திண்ணம் தான் என
இலங்கு நூல் உணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்று அது மெய் எனத் தேர்ந்துளேன்
விலங்கு இயற்கை இல்லை எனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுறல் ஆகுமே.

அ. கரணம் எனப்படுபவை எவை?

.....

ஆ. ஞானியர் கூறிய கருத்து யாது?

.....

.....

இ. விலங்கியற்கை என்றால் என்ன?

.....

ஈ. விண்ணுறல் என்றால் என்ன?

.....

iv. சூழும் மாய உலகினில் காணுறும்
தோற்றம் யாவையும் மானதம் ஆகுமால்
ஆழும் நெஞ்சகத்து ஆசை இன்று உள்ளதேல்
அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்
தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்
தாவித் தாவி பலபொருள் நாடுவோர்
வீழும் ஓர் இடர்பற்றினுக்கு அஞ்சுவோர்
விரும்பும் யாவும் பொறார் தாம் இவர் தாமன்றே.

அ. பாடலில் உள்ள அணியினை இனங்கண்டு விளக்குக?

.....

.....

.....

ஆ. விரும்பியவற்றை பெற முடியாமைக்கான காரணங்கள் எவை?

.....

.....

.....

V. விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்வர் பொய்ச் சாத்திரம் பேசுவர்
சாதகங்கள் புரட்டுவர் பொய்மை சேர்
மதியினில் புலை நாத்திகம் கூறுவர்
மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென ஓர்ந்திடார்
கண்ணில்லாதவர் போல திகைப்பர் காண்.

அ. வெகுளி என்பது உணர்த்தும் பொருள் யாது?

.....

ஆ. நாத்திகம் என்றால் என்ன?

.....

இ. கண்ணில்லதவர் போல திகைப்பவர் யார்?

.....

ஈ. விரும்பியவற்றை பெறமுடியாதவர்களின் இயல்புகளாக கூறப்படுபவை எவை?

.....

.....

.....

& அலகு 04 – தனிப்பாடல்கள்

i. பங்கப் பழனத்து உழும் உழவர்
பலவின் கனியைப் பறித்தது என்று
சங்கு இட்டு எறிய குரங்கு இளநீர்
தனைக் கொண்டு எறியும் தமிழ்நாடா
கொங்கார்க்கு அமராபதி அளித்த
கோவே இராச குலதிலகா
வெங்கட் பிறைக்கும் கரும்பு இறைக்கும்
மெலிந்து அம்பு இறைக்கும் வீழிவேலே.

அ. இப் பாடலைப் பாடியவர் யார்?

.....

ஆ. பங்கம் என்பதன் கருத்து யாது?

.....

இ. பழனம் என்றால் என்ன?

.....

ஈ. கொங்கர்க்கு அமராபதி அளித்தவன் யார்?

……

உ. அமராபதி என்பதன் பொருள் யாது?

……

ஊ. பாடலில் புலப்படும் மூன்று பிறைகளும் எவை?

……
……
……

எ. விழிவேல் என்பது எவ்வகையான அணியாகும்?

……

ii. ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்
ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு
மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே.

அ. இப் பாடலைப் பாடியவர் யார்?

……

ஆ. சமப்படுத்தி விற்கப்பட்ட பொருட்கள் எவை?

……

இ. இப் பாடலில் எந்த மன்னனின் கொடைச் சிறப்பு புலப்படுகின்றது?

……

ஈ. வரோதயன் என்பதன் பொருள் யாது?

……

iii. கழியும் பிழை பொருள் தள்ளி நன்னூலாம் கடலில் உண்டு
வழியும் பொதிகை வரையினில் கால் கொண்டு வண் கவிதை
மொழியும் புலவர் மனத்தை இடித்து முழங்கி மின்னீர்
பொழியும் படிக்கு கவி காளமேகம் புறப்பட்டதே.

அ. இப் பாடலை பாடியவர் யார்?

……

ஆ. நன்னூலாம் கடலில் உண்டு.. என்பதில் உள்ள அணி யாது?

……

iv. ஆடிக் குடத்து அடையும் ஆடும் போதே இரையும்
மூடி திறக்கின் முகம் காட்டும் ஓடி மண்டை
பரபர எனும் பாரில் பிண்ணாக்கு உண்டாம்
உற்றிடும் பாம்பு எள்ளு எனவே ஓது.

அ. இப் பாடலைப் பாடியவர் யார்?

……

ஆ. இப் பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது?

……

இ. இங்கு சிலேடையாக ஒப்பிடப்பட்ட பொருட்கள் எவை?

……

ஈ. பிண்ணாக்கு என்பது குறிக்கும் இரு பொருளும் எவை?

……

அலகு 05 – கம்பியூட்டர் சிறுகதை

01. கம்பியூட்டர் சிறுகதை இடம்பெற்றுள்ள நூல் எது?

……

02. கம்பியூட்டர் எனும் சிறுகதையின் ஆசிரியர் யார்?

……

03. " நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர் விடுவாரா.."

அ. தலபுராணம் என்பதன் கருத்து யாது?

……

ஆ. மேற்படி கூற்று எத்தகு பொருளில் சிறுகதையில் இடம்பெற்றுள்ளது?

……

04. " எமிரோ வோரி.. எந்துண்டி வஸ்தி என்பாள்.. இக் கூற்றுக்குரியர் யார்?

……

05. " இந்தக் கம்பியூட்டரும் அப்படித்தான் அட்ச இருதயக்கலையில் கைதேர்ந்ததாக இருந்தது... "

ஆ. அட்ச இருதயக் கலை என்றால் என்ன?

……

அ. அக் கலையுடன் தொடர்புடையவன் யார்?

……

06. " என்னுடைய மகன் குவளை மலர் போன்ற கரு நீலக்கண்களை இன்னும்..

அ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

……

ஆ. இங்கு மகன் என விளிக்கப்பட்டவன் யார்?

……

07. " வீட்டிராதே வீட்டிராதே பிடி என்று கத்தினேன்.. " இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

……

08. " என்னம்மா, நீங்க சும்மா சும்மா கூப்பிட்டு ட்ரபிள் கொடுக்கிறீங்கள்.. "

அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

……

ஆ. ட்ரபிள் என்பது குறித்து நிற்கும் பொருள் ?

……

09. " இந்தப் பைல் இங்க எப்படி வந்தது..." இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

……

10. இப்படியாக சந்தி பிரிக்காத பாடல் போல தலை சுற்றியது விவகாரம்.. இங்கு சந்தி பிரிக்காத பாடல் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

……

11. 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்..

அ. 486 கம்பியூட்டர் என்பதால் கதையாசிரியர் கருதியது யாது?

.....

ஆ. பரணி என்பதால் கருதப்படுவது யாது?

.....

இ. பரணி என்பது எவ்வகையான இலக்கிய வடிவமாகும்?

.....

ஈ. உச்சாடனம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

.....

& அலகு 06 – திருக்குற்றாலக்குறவஞ்சி

01. திருக்குற்றாலக் குறவஞ்சி எனும் இலக்கியத்தின் ஆசிரியர் யார்?

.....

02. குறவஞ்சி என்பது எவ்வகையான இலக்கிய வடிவத்தை சேர்ந்தது?

.....

03. திருக்குற்றாலக் குறவஞ்சியின் தலைவன், தலைவி யாவர்?

.....

04. குறவஞ்சி என்பதன் பொருள் யாது?

.....

05. வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்...”

அ. இங்கு வான்கவிகள் எனப்படுவோர்?

.....

இ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?

.....

06. கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர் கவன சித்தர்
வந்து வந்து காயசித்தி விளைப்பர்... ”

அ. இதில் கானவர்கள் எனப்படுவோர்?

.....

ஆ. வானவர் என்பதன் கருத்து யாது?

.....

இ. காயசித்தி என்பதன் மூலம் கருதப்படுவது?

.....

ஈ. காயசித்தி மூலிகை விளைவிப்போர் யாவர்?

.....

07. தேனருவி திரை எழும்பி வானின்வழி ஒழுகும் செங்கதிரோன்
பரிக்காலும், தேர்க்காலும் வழுகும்... ”

அ. இங்கு செங்கதிரோன் எனப்படுவோன் யார்?

.....

ஆ. தேர்க் கால் என்பதன் கருத்து யாது?

.....

08. கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்...

அ. கூனிலிளம் பிறை என்பதன் பொருள்?

.....

ஆ. கூனலிளம் பிறை முடித்தவர் யார்?

.....

இ. வேணி என்றால் என்ன?

.....

09. கிம்புரியின் கொம்பொடித்து வெம்பு திணை இடிப்போம்... ”

அ. இதில் கிம்புரி எனக்கருதப்படுவது யாது?

.....

ஆ. மேற்படி செயல்களை புரிபவர்கள் யார்?

.....

10. விஷேஷம் மூன்றும் குலா உள்ள நாடு
போதம் மூன்றும் நலன் செய்யும் நாடு
புவனம் மூன்றும் வலஞ் செய்யும் நாடு
நாதம் மூன்று உருவான குற்றால
நாதர் ஆரிய நாடு எங்கள் நாடே

அ. இங்கு விஷேசம் எனக் கருதப்படுபவை?

.....

ஆ. போதம் மூன்றும் எனப்படுபவை எவை?

.....

இ. புவனம் மூன்றும் எவை?

.....

ஈ. இவ்வடியில் நாத மூன்றுரு எனப்படுவோர் யாவர்?

.....=

அலகு 07 – நாட்டார் பாடல்கள்

1. " பட்டி பெருக வேணும் தம்பிரானே
பாற்பானை பொங்கவேண்டும்...

அ. இங்கு தம்பிரான் எனப்படும் கடவுள் யார்?

.....

ஆ. இப் பாடல் எத் தலைப்பில் இடம்பெற்றுள்ளது?

.....

2. " மேழி பெருக வேணும் தம்பிரானே
மேதினியோர் வாழ வேண்டும்...

அ. மேழி என்பது உணர்த்தும் பொருள் யாது?

.....

ஆ. மேதினி என்பதன் பொருள் யாது?

.....

3. ஆசைக் கிளியே என்ர ஆசியத்து உம்மாவே
ஓசைக் குரல்லே..

அ. இங்கு ஆசியத்து உம்மா எனக் குறிக்கப்படுவது யாது ?

.....

ஆ. இக் கூற்று யாரால் உரைக்கப்பட்டுள்ளது ?

.....

4. மாமி மகளே என்ர மருதக்கிளி வங்கிசமே
ஏலங்கிராம்பே...

அ. வங்கிசம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

.....

ஆ. மாமி மகளே என்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படும் உறவு முறை யாது?

.....

5. அல்லா மேல் ஆனை உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி...

அ. காட்டுப்பள்ளி என்பதன் பொருள் யாது?

.....

ஆ. இவ்வரிகளில் காதலனின் எத்தகு மனநிலை புலப்படுகின்றது?

.....

6. சீனத்து செப்பே என்ர சிங்காரப் பூநிலவே...

அ. இங்கு காதலன் தன் காதலியை எவ்வாறு வர்ணிக்கின்றான்?

.....

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?

.....

7. கடலே நீ இரையாதே காற்றே நீ வீசாதே நிலவே
நீ எறியாதே என்ர நீல வண்டு போய்ச் சேருமட்டும்..

அ. இவ்வடிகளின் வாயிலாக காதலனின் எத்தகு உணர்வு வெளிப்படுகின்றது?

.....

ஆ. நிலவே நீ எறியாதே.. என காதலன் உரைக்கக் காரணம் யாது?

.....
.....
.....

8. இப் பாடலில் காதலன் தன் காதலியை எவ்வாறான பெயர்களைக் கூறி அழைக்கின்றான்?

.....
.....
.....
.....
.....

<u>அலகு 08 – கம்பராமாயணம் குகப்படலம்</u>

01. கள்ள ஆசையை அழித்து வேறு அவனி
பண்டு ஆண்ட...

அ. கள்ள ஆசை என்பது உணர்த்தும் கருத்து யாது?

.....

ஆ. பண்டு ஆண்ட என்பதன் கருத்து யாது?

.....

02. அவனி பண்டு ஆண்ட வேந்தரை இழித்து
மேல் ஏறினான் தானும் ஏறினான் ...

அ. இங்கு ஏறினான் எனப்படுபவன் யார்?

.....

ஆ. ஏறினான் என்பது குறிக்கும் இரு பொருள் யாவை?

.....

03. கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி...

அ. இங்கு முதல் தேவி எனப்படுபவர் யார்?

.....

ஆ. கோக்கள் வைகும் முற்றத்தான் யார்?

.....

04. மூன்று உலகும் ஈன்றானை முன்ஈன்றானைப்...

அ. இங்கு மூன்று உலகும் ஈன்றவன் யார்?

.....

ஆ. முன் ஈன்றான் எனும் பதம் யாரைக் குறிக்கிறது?

.....

05. கன்றுபீரி காராவின் துயருடைய கொடி வினவ...

அ. இங்கு கொடி எனப்படுவது யார்?

.....

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

.....

06. இன் துணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்...

அ. இதில் இளையவன், மூத்தான் எனப்படுபவர்கள் யாவர்?

.....

ஆ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

.....

07. குன்று அனைய திருநெடுந் தோள்குகன்
என்பான் இந் நின்ற குரசில்...

அ. இங்கு குகனது சிறப்பு யாது?

.....

ஆ. குரசில் என்பதன் கருத்து யாது?

.....

08. நைவீர் அலீர் மைந்தீர் இனித் துயரால் நாடு இறந்து
காடு நோக்கி மெய் வீரர் பெயர்ந்ததுவும். ..

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

.....=

ஆ. மெய் வீரர் என விழிக்கப்படுவர்கள் யாவர்?

.....=

09. விலங்கல் திண் தோள் கை வீரக் களிறு அனைய காளை இவன்..

அ. விலங்கல் என்பது குறிக்கும் கருத்து யாது?

.....

ஆ. இவ்வடிகளில் காளை என விளிக்கப்பட்டவன் யார்?

.....

10. நீவீர் ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை நெடும்
காலம் அளித்தீர் என்றான்...

அ. இக் கூற்றினை உரைத்தது யார்?

.....

ஆ. இங்கு ஐவீர் எனப்படுவோர் யாவர்?

.....

.....

11. அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை
நோக்கி, ஐய. அன்பின் நிறைந்தாளை உரை ...

அ. இதில் அயல் நின்றாள் எனக் கருதுவது யாரை?

.....

. ஆ. இக் கூற்றினை வினவியது யார்?

.....

12. சுடு மயானத்திடை தன் துணை ஏக
தோன்றல் துயர்க் கடலில் ஏக ...

அ. இங்கு சுடுமயானத்திடை ஏகியவன் யார்?

.....

ஆ. சுடுமயானத்திடை தன் கணவனை அனுப்பியவள் யார்?

.....

இ. தோன்றல் எனப்படுபவன் இங்கு யார்?

.....=

13. கடுமை ஆர் கானகத்து கருணை ஆர்கலி ஏக...

அ. இங்கு வெளிப்படும் அணியினைக் குறிப்பிடுக?

.....

ஆ. இங்கு கருணை ஆர்கலி எனப்படுபவன் யார்?

.....

14. கழல்கால் மைந்தன் நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்
தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாளை...

அ. நெடுமையால் உலகளந்தது யார்?

.....

ஆ. கொடுமையால் உலகளந்தது யார்?

.....

15. படர் எலாம் படைத்தாளை பழி வளர்க்கும்
செவிலியை...

அ. படர் எலாம் படைத்தவள் இங்கு யார்?

.....

ஆ. செவிலி என்பதன் பொருள் யாது?

.....

●●●●●●●